**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 214** **நாள் : 19.12.2024**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள மயானபூமிகளை மேம்படுத்துதல் மற்றும் மாண்புமிகு மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை அறிவிப்புகளின் முன்னேற்ற நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள மயானபூமிகளை மேம்படுத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் தலைமையில், இன்று (19.12.2024) ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் உள்ள 203 மயானங்களில் மேம்பாடுசெய்தல், சுற்றுச்சுவர் கட்டுதல், நடைபாதை அமைத்தல் பசுமைப் பரப்பை உருவாக்குதல், மின் வசதி, தண்ணீர் வசதி, கழிப்பிட வசதி உள்ளிட்ட உட்கட்டமைப்புகளை மேம்படுத்தும் பணிகள், தேவையான பணியாளர்களைக் கொண்டு பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள், விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள மயானங்களில் மேம்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக மாண்புமிகு மேயர் அவர்கள் ஆய்வு செய்து ஆலோசனைகளை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு மேயர் அவர்கள் தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சியில் 2024-25ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை அறிவிப்புகளின் முன்னேற்ற நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு மேயர் அவர்களின் 2024 --25 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் படி பெருநகர சென்னை மாநகராட்சியில் கல்வித்துறை, பொது சுகாதாரத்துறை, இயந்திரப் பொறியியல் துறை, மழை நீர் வடிகால் துறை, கட்டடத்துறை, பாலங்கள் துறை, பூங்கா மற்றும் விளையாட்டுத் துறை, தகவல் தொழில்நுட்பத்துறை, திடக்கழிவு மேலாண்மைத் துறை, பேருந்து சாலைகள் துறை, மன்றத் துறை உள்ளிட்ட துறைகளின் வாயிலாக செயல்படுத்தப்பட வேண்டிய அறிவிப்புகளின் முன்னேற்றங்கள் குறித்து ஆய்வு செய்து மேயர் அவர்களின் அறிவிப்புகளின் மீது உரிய நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு இப்பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டங்களில், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், ஆணையாளர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி.ஜெய சந்திர பானு ரெட்டி, இ.ஆ.ப., இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ.விஜயா ராணி, இ.ஆ.ப., துணை ஆணையாளர்கள் திரு.வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., (பணிகள்), திரு.ம.பிரதிவிராஜ், இ.ஆ.ப., (வருவாய் (ம) நிதி), வட்டார துணை ஆணையாளர்கள் திரு.எம்.பி.அமித், இ.ஆ.ப., (தெற்கு),

திரு.கே.ஜெ.பிரவீன் குமார், இ.ஆ.ப., (மத்தியம்), திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு), நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ.சாந்தகுமாரி, மாநகர நல அலுவலர், தலைமைப் பொறியாளர்கள், மண்டல அலுவலர்கள், மண்டல நல அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**